திருவள்ளுவர் ஆண்டு 2044

பிப்ரவரி - 2013

# செந்தமிழ்

தொகுதி : 57
பகுதி : 4

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




செந்தமிழ்க் கல்லூரி தமிழ் உயராய்வு மையம் மற்றும் சென்னை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இணைந்து நடத்திய "செந்தமிழ் இதழில் வெளிவந்த செவ்வியல் ஆய்வுகள்" மூன்று நாட்கள் (31-01-2013 – 02-02-2013) தேசியக் கருத்தரங்கத் தொடக்க விழாவில் கல்லூரிச் செயலர் திருமிகு. இரா. குருசாமி குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.
உடன் தஞ்சைப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் திரு. இ. சுந்தரமூர்த்தி, உலகத்திருக்குறள் பேரவைச் செயலர் திரு. ந. மணிமொழியன், கல்லூரி முதன்மையர் மற்றும் முதல்வர்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 57 திங்கள் இதழ்

பகுதி : 4 திருவள்ளுவர் ஆண்டு 2043

பிப்ரவரி 2013



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சீவகசிந்தாமணியில் சிவமரபுச் சிந்தனைகள் | புலவர் து. குருசாமி தேசிகர் | 4 |
| சங்க இலக்கியப் பிரதிகள் முன்வைக்கும் குரவைக் கூத்து | முனைவர் செ. ஞானேஸ்வரன் | 10 |
| உடம்படுமெய்கள் – உடம்படா வாதங்கள் | புலவர் சா. பன்னீர்செல்வம் | 15 |
| யார் நல்லாசிரியன்? | டாக்டர் வ.க. கன்னியப்பன் | 22 |
| நூல் | ஆறுவிரல் ஐம்பொறி | 28 |
| கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் வருணனை உத்திகள் | ந. ராஜகுமார் | 29 |
| பாவேந்தரின் மூன்று ஒப்பில்லா உவமைகள் | கவிஞர் கா. வேழவேந்தன் | 34 |
| நகரங்களின் அமைப்பில் துறைமுகப்பட்டினங்களும், வாணிங்களும் | ச. ஸ்ரீதர் | 38 |

# இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம் !

பெப்ரவரி மாதச் செந்தமிழ் இதழ் தங்கள் கைகளில் மிகச் சிறந்த இலக்கியக் கட்டுரைகளோடு தவழ்கிறது. சீவக சிந்தாமணி ஒரு சமணக் காப்பியம். இருந்தாலும் சிவமரபுச் சிந்தனைகள் இல்லாமல் செயல்பட முடியாதவராகவே இதன் ஆசிரியர் திருத்தக்க தேவர் வாழ்ந்ததை பெரும்புலவர் தா. குருசாமிதேசிகர் நுண்மான் நுளைபுலத்தோடு சொல்லியிருக்கும் திறம் பாராட்டிற்குரியது.

பண்டைக் காலத்துக் கூத்து வகையினுள் ஒன்றாகிய குரவைக் கூத்தினை தமிழ் மக்கள் தத்தம் பகுதிகளில் எவ்வாறு ஆடி மகிழ்ந்தனர் என்பதனை நல்ல இலக்கியச் சான்றுகளோடு முனைவர் செ. ஞானேஸ்வரன் அவர்கள் தந்து மகிழ்விக்கிறார்.

"மனிதரில் சிலரை நாணயமற்றவர் என்கிறோம். மொழிகளில் நாணயமற்ற மொழி ஆங்கிலம்" – என அழுத்தமாகத் தன் வாதத்தை வைத்து உடம்படுமெய்கள் – உடம்படா வாதங்கள் எனத் தன் கருத்து மோதலைத் தொடர்கிறார் புலவர் சா. பன்னீர்ச்செல்வம் அவர்கள்.

யார் நல்லாசிரியர்? என்பதைக் கண்மருத்துவர் டாக்டர் வ.க. கன்னியப்பன் அவர்களும் கண்ணதாசன் பாடல்களில் வருணனை உத்திகள் பற்றி ந. ராஜகுமார் அவர்களும் தந்திருப்பது அருமை.

வழக்கமாகக் கவிதை தரும் கா. வேழவேந்தன் அவர்கள் பாவேந்தரின் மூன்று ஒப்பிலா உவமைகள் என கட்டுரை தந்து வியப்பில் ஆழ்த்தியிருக்கிறார். தொடர்ந்து ஆறுவிரல் ஐம்பொறி அவர்களின் மரபுக் கவிதையையும் வாசகர் வாசகங்களையும் தாங்கி வரும் இம்மாத இதழை வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.

முனைவர் க. சின்னப்பா

**இனி நீங்களும் இதழும்....**

# சீவகசிந்தாமணியில் சிவமரபுச் சிந்தனைகள்

புலவர் தா. குருசாமி தேசிகர்

சீவகசிந்தாமணி செந்தமிழ்க் காப்பியத்தில் ஒன்று. சீவகன் பிறந்தவுடன் அவன் தாய், விசையை அவனைச் சிந்தாமணி என்று பாராட்டினமையால் சிந்தாமணி என்பது முதலில் சீவகனுக்குப் பெயராகி, அப்பால் அவன் சரித்திரமாகிய இந்நூலுக்கு ஆயிற்று என்பர். புலவர் சிந்தித்தவற்றையெல்லாம் தருதலால் சிந்தாமணி என்றும் பெயர் பெற்றது என்பர். இக்காப்பியத்திற்கு மணநூல் என்றும் பெயர் வழங்கும்.

## மணநூல் பெயர்க்காரணம்

சிந்தாமணியின் உறுப்பாகிய, இலம்பகத்தில் சீவகன் காந்தருவத்தை முதலிய எண்வகை மகளிரை மணம் செய்ததோடு, தன் தோழன் பதுமுகனுக்குக் கோவிந்தையை மணம் செய்வித்தும், சீவகன் மேலும் நாமகள், மணமகள், பூமகள், முத்திமகள் என்னும் இவரை மருவியதுமாக நூல் முழுதும் மணங்களே கூறப்படுவதால் இதற்கு மணநூல் என்று பெயர் விளங்கலாயிற்று. இந்நூல் ஜைனர்களால் பூசித்துப் பாராணயம் செய்யப்படுகிறது என்பர் பதிப்பாசிரியர்.

## உரையாசிரியர்கள் போற்றுதல்

அடியார்க்குநல்லார், பரிமேலழகர், வெள்ளியம்பலவாணமுனிவர், சிவஞானமுனிவர் முதலிய உரையாசிரியர்கள் தங்கள் உரையில் சிந்தாமணிப் பாடல்களை மேற்கோளாகக் காட்டியு ள்ளனர். நச்சினார்க்கினியர்சிந்தாமணி நூல் முழுமைக்கும் உரை வழங்கியுள்ளார். டாக்டர் உ.வே.சா அடிக்குறிப்பும் விசேடக்குறிப்பும் அகராதி முதலிய சேர்க்கையும் சிந்தாமணி மூலமாகப் பதிப்பித்து, தன் கடும் உழைப்பை வெளிப்படுத்தியுள்ளார். தமிழ் தாத்தா அவர்கட்கு சிந்தாமணி பதிப்பு மிக்க புகழை ஈட்டித் தந்தது என்று ஆய்வாளர்கள் கூறுவர். நூலைப் பார்த்தவர்களுக்குத்தான் இதன் உண்மை தெரியும். இந்நூலை ஆராய்ந்து

பதிப்பித்தவர் ஓர் உண்மையை வெளிப்படுத்துவார். பல வடமொழிகளும், பிராகிருத மொழிகளும் தமிழில் கலந்து வழங்குவதற்குக் காரணமாக சிந்தாமணி உள்ளது என்பார்.

## சமயக்காழ்ப்பின்மை

ஆசிரியர் திருத்தக்கத் தேவர் என்பது மட்டும் தெரிகிறது. அவர் பற்றி வழங்கும் கட்டுக்கதைகள் வழக்கம் போல எல்லாப் பெரும்புலவர்கட்கும் வழங்கும் கதைகள் போலவே இவருக்கும் வழங்கியதை நூல் மூலமாக அறியலாம். ஆசிரியர் திருத்தக்கத் தேவர் வாழ்ந்த காலம் சமயப் பொறுமையும் சமயக் காழ்ப்பும் இல்லாத காலமாக இருக்க வேண்டும். இவர் நூலில் சிவமரபுச் சிந்தனைகள் சிதையாமல் கூறப்பட்டுள்ளன. அச்சிந்தனைகள் சிவமரபுக்கு ஒத்தும், சிறிது வேறுபட்டும் வருவதை பதிப்பாசிரியர் நன்கு சுட்டியுள்ளார்.

## 1. நாகப்படுக்கை

நாகப்படுக்கையிலே மாயோன் துயிலுதலை அப்பரடிகள் ஆரூர்த் தேவாரத்தில், பையஞ்சுடர்விடு நாகப் பள்ளிகொள்வான் உள்ளத்தானும் என்று விவரிப்பார். இதனைத் திருத்தக்கத் தேவர் பாம்பணையிலே திருமால் துயிலுதல் போல, காந்தள் பூக்களைப் படுக்கையாகக் கொண்டு, யானை துயிலும் அழகிய பொழில் என்று பாடுவார். அப்பாட்டின் வரி சிந்திக்கத்தக்கது.

**"பைநாகப்பள்ளி மணிவண்ணிற் பாயல் கொண்டு**

**கைநாகந் துஞ்சும் கமழ் காந்தளஞ்சாரல்"** என்று பாம்பணையானைச் சிந்திப்பார்.

## 2. நாமகள் திருமாமகள்

சம்பந்தர் திருவீழிமிழலைத் தேவாரத்தில், நாமகள், திருமகள் பற்றிய செய்தியை அறிமுகம் செய்வார். "திருவீழிமிழலை மன மகிழ்வோடு பயில்பவர் எழில் மலர்மகள், கலைமகள் சயமகள் - இனமலிபுகழ் மகள் இசைதர இருநிலனிடை யினிதமர்வரே" என்பர். திருத்தக்கத் தேவர் சிந்தாமணி நாமகள் இலம்பகத்தில் நாட்டுவளங் கூறுகின்ற பகுதியில் கீழ்க்கண்ட திருமகள், நாமகள் முதலியவற்றைச் சிந்திக்கின்றார். அச்செய்யுள் வரி நம் சமய மரபிற்கு முன்னோடியாகும்.

நாவீற்றிருந்த புலமாமகளோடு நன்பொற்
பூவீற்றிருந்த திருமாமகள் புள்ள நாட்டணி
கூறலுற்றேன் என்பார்.

இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் திருமகளும் கலைமகளும் தடையின்றி ஏமாங்கத நாட்டை அழகு செய்தனர் என்பர்.

## 3. கொன்றைச் சடையான்

மழைமேகம் யானைக் கூட்டம் போல கடல்நீரைப் பருகி சூல் முதிர்ந்து, மலையைச் சேர்ந்து, பின்பு விண்ணிலே ஏறி சிவபெருமான் சடைபோல் மின்னி ஆர்த்தன என்று, சிந்தாமணி பாட்டின் கருத்து, தேவாரத்தில் செஞ்சடையப்பன் என்ற கட்டமைப்பின் பொருளை நன்கு விளக்கும்.

"பொலங் கொள் கொன்றையினான் சடைபோல் மின்னி
விலங்கல் சேர்ந்து விண்ணேறி விட்டார்த்தவே"

என்ற சிந்தாமணிப் பாட்டின் சிந்தனை மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை என்ற சைவத் திருமுறைக்கு முன்னோடியாய் உள்ளது என்று அறிந்து மகிழலாம்.

## 4. கடைக்கண்ணோக்கு

நகர்வளம் கூறவந்த சிந்தாமணி ஆசிரியர் இராசமாபுரத்தை வருணிக்கிறார். அந்நகரம் பெண்ணினுடைய கண்வலையில் அகப்படாத முனிவருடைய தவப்பயன் போல விளங்கியது என்பார்.

"பெண்வலைப் படாதவர் பீழன் ஓங்கிய
அண்ணலங் கழநகர் அமைதி செப்புவாம்" என்பது சிந்தாமணி வரிகள். இதன் கருத்தை அப்பரடிகளின் தாண்டகவரி இன்னும் தெளிவாக்கி எம்பெருமானைச் சாரவைக்கும்.

"சுரும்பமருங் குழன்மடவார் கடைக்கண் நோக்கில்
துலங்காத சிந்தையராய் துறந்தோர் உள்ளப்
பெரும்பயனை" என்று அருளி சிவச்சார்பு அருள்வார்.

## 5. நாயிற்குத் தவிசிடல்

தன் அமைச்சனான கட்டியங்காரனிடம், சச்சந்தன் அரசுரிமையை அவனிடம் அளித்த செய்தியைக் கூறவந்த திருத்தக்கத் தேவர், கட்டியங்காரன்

கூற்றில்வைத்து ஞாலங்காவல் எனக்குத் தருவது, நாய்மீது தவிசிட்டது போலும் என்று மறுத்து மொழிவதாகக் கூறும் பகுதி, சிந்தனைக்குரிய முன்னைய உவமையாகும்.

"அடுகளிற்று எருத்தினிட்ட
வண்ணப்பூந் தவிசுதன்னை
ஞமலிமேலிட்ட தொக்கும்
கண்ணகன் ஞாலங்காத்தல்" என்பது சிந்தாமணித் தொடர்.

திருவாசகத்தில் இம்முன்னோர் மொழிபொருளை வேறுபாடு கருதாமல் வாதவூரரும் போற்றியிருப்பது ஒப்பு நோக்கி மகிழத்தக்கதாகும். திருவாசகத்தில்

"எம்பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமாறன்றே
நின்பொன்னருளே" என்றும்

"நானாரடி அணைவான் ஒரு நாய்க்குத்
தவிசிட்டிங்கு ஊனார் உடல்புகுந்தான்
உயிர் கலந்தான் உளம்பிரியான்" என்றும் அருள்வார்

நாய்க்குத் தவிசிட்டது என்ற உவமை சைவ மரபில் எடுத்தாளப்படுவது எண்ணத்தக்க செய்தியாகும்.

## 6. பிரமதேவன் பீடிழந்தமை

பிரமதேவன் தான் படைத்த திலோத்தமையின் அழகில் மயங்கி, பதவி இழந்து, தவத்தால் பாவம் தீர்ந்த புராண மரபு பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர் பூம்பாவையை எழச்செய்த பகுதியில் சிந்திக்கப்படுகிறது. பூம்பாவையின் அழகை எம்பிரானின் கருணை வெள்ளமாக சம்பந்தர் பார்த்தார் என்றும், பிரமதேவன் தான் படைத்த திலோத்தமையிடம் மையல் கொண்டான் என்ற செய்தியும் இருவரையும் ஒப்பிட்டுக் கூறும். பிரமனின் இந்தச் செய்தியை

"பெரும் பெயர் பிரமன் என்னும் பீடனாற் பெரிய நீரான்
அரும்பிய முலையினாளுக்கு அணிமுகம் நான்குதோன்ற
விரும்பியாங்கு அவளையெய்தான் விண்ணகமிழந்ததன்றித்
திருந்தினாற் கின்றுகாறுஞ் சிறுசொல்லாய் நின்றதன்றே"

என்ற சிந்தாமணிப் பாடல், திருஞானசம்பந்தர் புராணப் பாடல் ஒன்றக்கு விரிவு தரும். அப்பாடல்

"எண்ணலாண்டெய்தும் வேதாப் படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணுநான்முகத்தால் கண்டான் அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினாறாண்டு பேர்பெறும் புகலிவேந்தர்
கண்ணுதல் கருணைவெள்ளம் ஆயிரமுகத்தாற் கண்டார்" இப்பாடலின் திறவுகோலாக மேலே உள்ள சிந்தாமணிப் பாடல் திகழ்கிறது.

## 7. காமன் திருமகன்

சீவகன் தந்தை சச்சந்தனைக் கூறும்போது, வறுமையைப் போக்குவதில் வருணன் என்றும், பகைவரை வெல்லுவதில் கூற்றுவன் என்றும், அழகால் காமன் என்றும் வருணிப்பார்.

"தனது ஈகையால் வருணன்
கூற்றுயிர் மாற்றலின் அழகிற்கு
கணை ஐந்துடைத் திருமகன்
திருமாநில மன்னனே"

என்ற பாடலில் ஐந்து பூங்கணைகளை உடைய மன்மதன் கூறப்படுகிறான். இது சிவமரபுச் சிந்தனைக்கு முன்னோடி சச்சந்தன் மனைவி விசையை என்பவள் தந்தை அரிமர்த்தனன் என்பதும், உரைக் குறிப்பால் அரிமர்த்தன பாண்டியன் என்ற பெயர்க் கொடை சிந்தாமணி வழங்கியது என்றும் தெரியலாம்.

## 8. தக்கன் சாபம்

தக்கன் சந்திரனுக்குச் சாபம் நல்கிய புராண மரபு சிந்தாமணியில் பேசப்படுகிறது. நமது கந்தபுராணத்திலும் பேசப்படுகிறது. மன்னன் சச்சந்தன் பெண்வழிச் சேர்ந்து, நாடு இருளாகும் வண்ணம் அரசாட்சியை மறந்தான். அதற்கு உவமையாக, சந்திரன் தேய்ந்து இருளாகிய வண்ணம் உலகம் இருந்தது என்று சிந்தாமணிப் பாடல் சிந்திக்கிறது.

"விண்ணகம் இருள்கொள விளங்கு வெண்மதி
ஒண்ணிற உரோகிணியோடு ஒளித்தது ஒத்ததே"

என்ற செய்யுள் வரிக்கு நச்சினார்க்கினியர், உரையில் உரோகிணி காரணத்தின் இருடி சபிக்க மதிதேய்ந்தொரு கதை என்று உரை செய்வார். இருடி என்ற சொல் தக்கனைக் குறிக்கும். திருமுறையில் பல இடங்களில்

தக்கன் சம்பவம் காணலாம். தக்கன் பற்றிய சிவமரபுச் செய்திகள், சிந்தாமணியில் வழங்குவது காலப்பழமையை உணர்த்தும் எனலாம்.

## 9. போகம் என்ற புண்ணியன்

சிவபெருமானைச் சத்தியும் சிவனுமாய் உலகத்துக்கெல்லாம் "போகத்தை உண்டாக்கின புண்ணியன்" என்று சிந்தாமணி கூறும். சிவபெருமான் திரிபுரத்தை அழித்தும், நஞ்சுண்டும், பல்லுயிர்களையும் காத்தது போல சீவகன் நந்தகோன் மனையிலே வளர்ந்தான் என்ற செய்தியை கூறுகின்ற பாடல் சிவமரபு மீறாமல் கூறியதாகும்.

**"போகம் ஈன்ற புண்ணியன் எய்த கணையேபோல்**
**மாமகமீன்ற மாமதியண்ணான் வளர்கின்றான்"**

இச்செய்யுளில் சிவபெருமானை போகம் ஈன்ற புண்ணியன் என்று கூறும் பாங்கு மகிழத்தக்கதாகும். இத்தொடரின் விளக்கமாக திருஞானசம்பந்தர் பாடல் ஒன்று சிந்திக்கத்தக்கது.

**"தரை முதல் உலகினில் உயிர்புக தகைமிக**
**விரைமலி குழலுமையொடு விரவது செய்து**
**நரைதிரை கெடுதகவது வருளினன் எழில்**
**வரைதிகழ் மதில் வலிவரமுறை யிறையே"**

என்ற பாடல் பெருமான் போகம் ஈன்ற புண்ணியன் என்று அடையாளங் காட்டும். திருநாவுக்கரசர், "பேரார்புரங்கள் புரளநூறும் புண்ணியனை" என்று போகம் ஈன்ற புண்ணியனை மேலும் விளக்கமாகக் கூறுவார்.

சீவக சிந்தாமணிக் கவிநயம் உணர்ந்த சோழன், சேக்கிழார் பெரியபுராணத்தால் பக்திநயம் உணர்ந்த, வரலாற்றுச் சம்பவம் பெரிதும் பேசப்படுவதை நாம் அறிவோம். சிந்தாமணிக் காப்பியம் ஜைன நூலாக இருந்தாலும் சிவநெறி மரபுக் கதைகட்கு முன்னோடியாகவும் விளங்குகிறது என்று தொடர்ந்து ஆய்ந்து காண்போம்.

> உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
> மடந்தையொடு எம்மிடை நட்பு

# சங்க இலக்கியப் பிரதிகள் முன்வைக்கும் குரவைக் கூத்து

முனைவர் செ. ஞானேஸ்வரன்

## தொடக்கமாக

தமிழ்ச் சமூகத்தின் தொன்மைக் கூறுகளை சங்க இலக்கியங்கள் முன்மொழிகின்றன. பண்டைக் காலத்தில் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக ஆடவரும் மகளிரும் தனித்தும் சேர்ந்தும் கூத்து ஆடியுள்ளனர். இதற்கு குரவை என்பர் பண்டையச் சமூகத்தினர். இம்முறையே குரவைக் கூத்தின் தன்மையையும் அதன் திணை சார் பரவலையும் சங்கப்பிரதி வழி இக்கட்டுரை எடுத்துரைக்க முயல்கிறது.

## குரவை விளக்கம்

குரவையாவது பண்டைக் காலத்துக் கூத்து வகைகள் ஒன்று. இது வரிக்கூத்தின் ஓர் உறுப்பாகும். விநோதக் கூத்துக்கள் ஆறனுள் இஃது ஒன்றாகும். இவ்வகையே குரவை என்பதற்கு அபிதான சிந்தாமணி "ஒரு வகை கூத்தின் விகற்பம். இது எழுவர் மங்கையர் கைகோர்த்து ஆடுவதாம்" என விளக்கம் தருகிறது (ப.480). குரவை என்பது மங்கையர் எழுவர் கைகோர்த்து ஆடும் கூத்தாகும். இஃதை ஜான் ஆசிர்வாதம் "சங்க இலக்கியங்களில் மிகப் பரவலாகப் பேசப்படும் கூத்து குரவையாகும். அக்காலத்து சமுதாயத்தில் சில பொழுதுபோக்கு விளையாட்டுப் போலவே குரவையும் பாமரருக்குரிய கூத்தெனத் தெரிகின்றது" என்பர் ( தமிழர் கூத்துக்கள், ப. 24). அ. தெட்சிணாமூர்த்தி "குரவை வரிக்கூத்துள் ஒன்றாகும். எழுவரேனும், எண் மரேனும், ஒன்பதின் மரேனும் கை கோத்தும் மண்டிலமாக நின்றும் ஆடுவது" என்று குறிப்பிடுவர் (தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப. 350). இக்கூத்து சங்க இலக்கிய ஐந்திணைச் சமூகங்களில் பரவிக் காணப்படுவதை பிரதிகள் வலியுறுத்துகின்றன. குரவை அகத்திணையில்

காதல் பொருட்டும் புறத்திணையில் வெற்றியின் பொருட்டும் ஆடியமையை காணமுடிகிறது. இக்கருத்தாக்கத்தை கா. சுப்பிரமணியன் "குரவை காமம் அல்லது வெற்றி தொடர்பாக ஆடப்பெற்றது. இவை அகம், புறம் என்னும் பாகுபாட்டின் அடிப்படையில் அமைந்ததாகும்" என்பர் (சங்ககாலச் சமுதாயம், ப. 17). இக்கூத்து வழி திணை சார் தெய்வங்களையும் போற்றியுள்ளனர் என்பது சங்கப் பிரதிகளின் கண்கூடு.

## குறிஞ்சி நிலக்குரவை

மலையும் மலை சார்ந்த பகுதியில் வர்ழும் குறவர் இனமக்கள் குரவைக் கூத்து நிகழ்த்தியமையை

**வியல்அறை வரிக்கும் முன்றில் குறவர்**
**மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும்** (அகம் - 232)

**குறவர் தம் பெண்டிரொடு சிறுபறை**
**ஒலிக்கக் குரவைக் கூத்து ஆடினர்** (மலைபடு - 320 - 322)

**வரைஉறை தெய்வம் உவப்ப உவந்து**
**குரவை தழீஇ யாம்ஆட குரவையுள்** (கலி - 39)

**குறிஇறைக் குரம்பைக் குறவர் மாக்கள்**
**வாங்கு அமைப்பழுனிய தேறல் மகிழ்ந்து**
**வேங்கை முன்றில் குரவை அயரும்** (புறம் - 129)

என்னும் பாடல் வரிகளால் குறிப்பிடுகின்றனர். குறவர் இனமக்கள் முற்றத்தில் ஆடுதலில் முதிர்ச்சி பெற்ற மகளிரோடு சிறுபறை கொட்டி, தெய்வத்தைப் ( முருகன் ) போற்றி ஆடியுள்ளனர். மேலும் வேங்கை மர நிழலில் மூங்கில் குழாயில் வைத்த கள்ளை குடித்தும் ஆடியுள்ளனர். இஃது குறிஞ்சி நில மக்களின் மகிழ்ச்சியின் வெளிப்பாடே என இங்கு புலனாகிறது. ஆடவரும் மகளிரும் சேர்ந்து ஆடிப்பாடுதலை இனக்குழுவில் காணமுடியும் என்பர் ( கா. சுப்பிரமணியம், சங்க காலச் சமுதாயம், ப. 17 ), இக்கூத்தே பிறகு சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவையாக வளர்ந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## முல்லை நிலக்குரவை

காடும் காடு சார்ந்த பகுதியை வாழ்விடமாகக் கொண்ட ஆயர் சமூகத்தினர் தங்களின் மரபு சார் நிகழ்வான ஏறு தழுவலின் போது குரவை ஆடியமையை

**பண்ணமைஇன் சீர்க் குரவையுள் தென்கண்ணி** (கலி. 102)

**மாதர் மகளிரும் மைந்தரும் மைந்து உற்றுத்**
**தாதுஎரு மன்றத்து அயர்வர் தழூஉ** (கலி. 103)

**குரவை தழீஇயாம் மரபுளி பாடி**
**தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்** (கலி. 103)

**காஞ்சித்தாது ஊக்கண்ண தாது எருமன்றத்துத்**
**தூங்கும் குரவையுள் நின் பெண்டிர் கேளாமை** (கலி. 108)

என்னும் பாடல்வரிகள் விளக்குகின்றன

இக்கூத்தில் இசை முழக்கப்பட்டமையையும், தெய்வத்தை (திருமால்) போற்றியமையையும், தலைவன் தலைவிக்கு குறியிடமாக அமைந்தமையையும் காணமுடிகின்றன. முல்லை நிலத்திலும் ஆடவர் மகளிர் சேர்ந்து கூத்தாடியமையை பாடல் பதிவு வழி அறிய முடிகிறது. இஃது இனக்குழுச் சமூகமாக இருப்பினும் இனக்குழுச் சமூகம் நிலவுடமை சமூகமான மாற்றம் இத்திணையின் இறுதி நிலைப்பாட்டில் தொடங்குகின்றன. இஃதை ஆ. தனஞ்செயன் "மாயோன் வாயிலாகத் தன் வயமாக்கப்பட்ட வைதீகக் கடவுளான திருமாலும் குரவைக் கூத்தாடி மக்களால் வணங்கப்பட்டது என்று இலக்கியச் சான்றுகள் வழி அறிகிறோம்" என்பர். (சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலியலும், ப. 58). இக்குரவை கூத்தே பிறகு சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையாக வளர்ந்திருக்கிறது என்பது நோக்கத்தக்கதாகும்.

## மருத நிலக்குரவை

உழவர் குடிமக்கள் வாழும் வயலும் வயல் சார்ந்த நிலப்பரப்புச் சமுதாயத்தில் குரவைக் கூத்து நிகழ்த்தப்பட்டமையை,

**தெண்கட் தேறல் மாந்தி மகளிர்**
**நுண்செயல் அம்குடம் இரீஇ பண்பின்**

**மகிழ்நன் பரத்தைமை பாடி அவிழ் இணர்க்**
**காஞ்சிநீழல் குரவை அயரும்** (அகம். 336)

என்னும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன. கணவனின் பண்பற்ற பரத்தமை குறித்து காஞ்சி மர நிழலில் மகளிர் கள்ளுண்டு குரவை கூத்தாடியமையை இங்கு காண முடிகிறது. இந்நிலத்தில் மகளிர் தனித்தாடியமையை அறியமுடிகிறது. சங்க காலத்தில் "கள்" என்பது பால் வேறுபாடு இன்றி அனைவரும் உண்ட பானமாக இருப்பதைக் காணமுடிகிறது.

## நெய்தல் நிலக்குரவை

கடல்சார் பகுதியில் வாழ்ந்த பரதவர் இனமக்கள் கடற்கரை மணற்பரப்பில் குரவை நிகழ்த்தியமையை

**கடல்உடன் ஆடியும் கானல் அல்கியும்**
**தொடலை ஆயமொடு தழூஉஅணி அயர்ந்தும்** (குறு. 294)

**தாழை வீழ்கயிற்று ஊசல் தூங்கி**
**கொண்டல் இடுமணல் குரவை முனையின்** (அகம். 20)

**.................. பொய்யா மகளிர்**
**குப்பை வெண் மணல் குரவை நிறூஉம்** (ஐங். 181)

என்னும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

கடற்சோலையில் குழுவாக பெண்கள் கைகோர்த்து ஆடியமையை "தழுஅணி அயர்தல்" என்று குறித்துள்ளனர். இஃது பரதவமகளிரின் பொழுதுபோக்கு கலைகளில் ஒன்றாக இருந்தமையைக் காணமுடிகின்றன.

## பாலை நிலக்குரவை

வறண்ட பகுதியை வாழ்விடமாகக் கொண்ட பாலைச் சமூகத்தில் குரவை ஆடியமையை

**தைஇநின்ற தண்பெயல் கடை நாள்**

**.........................................................**

**வண்டற் பாவை உண்துறைத் தரீஇ**
**திருநுதல் மகளிர் குரவை அயரும்** (அகம். 269)

என்னும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. நீர்ச்சுரம் வறண்ட பகுதி பாலை. ஆனால் இங்கு குளிர்ந்த துறையில் வண்டற்பாவை வைத்து மகளிர் குரவை ஆடியுள்ளனர் என்று குறித்தமை வழி குறிஞ்சி / முல்லை முறைமை திரிந்த பகுதியே பாலை என்று இவ்விடத்து புலனாகிறது. பாலை என்ற நிலப்பகுதி தமிழ்ச் சமூகத்தில் இல்லை என்பது பிரதிகளில் கண்கூடு. கூத்துகள் குறித்து அ. தட்சிணாமூர்த்தி கூறுகையில் "நானிலத்து மக்களும் ஆடிப்பாடி மகிழ்ந்ததற்குச் சங்க நூல்களில் எண்ணற்ற சான்றுகள் உள்ளன" என்று குறிப்பிடுவது இங்கு கருதத் தக்கதாகும் ( தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப. 348)

## முடிவு

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் குரவைக் கூத்து குறிஞ்சி / முல்லை சமூகத்தில் இருபாலர் கலந்தும் ஏனைய மருதம் / நெய்தல் / பாலைச் சமூகத்தில் மகளிர் தனித்தும் ஆடியுள்ளனர். இவ்வகைப்பாடு இனக்குழுச் சமூகத்தில் ஒருமுறையாகவும் ஏனைய சமூகத்தில் பிரிதொரு முறையாகவும் நிகழ்ந்தமையைக் கூறுகின்றன.

இனக்குழுச் சமூக குரவை பிற்காலத்தில் சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவையாகவும், ஆய்ச்சியர் குரவையாகவும் வளர்ந்தமையைக் காணமுடிகின்றன.

அகம் சார்ந்த குரவை காதல் பொருட்டும் அதே புறம் சார்ந்த குரவை வெற்றியின் பொருட்டும் முன்தேர்க்குரவை, பின் தேர்க்குரவையாக ஆடியுள்ளனர் என்பதை பிரதிகளில் நோக்கத்தக்கதாகும்.

ஒரு கூத்தானது திணைவாரியாக பரவும் போது பல்வேறு நிலைப்பாடுகளில் இயங்குகின்றன என்பதை சங்கப்பிரதி வழி இங்கு அறியமுடிகிறது.

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்அமர்க் கண்ணாள் குணம்

# உடம்படுமெய்கள் – உடம்படா வாதங்கள்

புலவர் சா. பன்னீர்செல்வம்
பட்டுக்கோட்டை

வெவ்வேறு மொழி மரபுகளை ஒப்பாய்வு செய்தல் மொழியியலையையும், அதன் வழிப் பண்பாட்டியலையும் உணர்ந்தொழுகுதற்குத் துணையாகும். ஆனால், ஒப்பாய்வுக்குரிய ஒப்பு என்பதன் அடிப்படையைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் முதன்மைத் தேவையாகும். அவ்வகையில், தமிழ் மரபில் உடம்படுமெய் எனப்படுவது ஆங்கில மொழியில் எவ்வாறாகிறது என்னும் ஒப்பாய்வு செய்யப்புகுமுன், தமிழ் மரபில் உடம்படுமெய் என்பதன் அடிப்படை யா தென்பதில் தெளிதல் தேவையாகின்றது.

தமிழில், சொல்லின் முதல், இடை, கடை என எவ்விடத்தும் ஒன்றுக்கு மேற்பட்ட உயிர்கள் அடுத்தடுத்து அமைதல் இல்லை. அன்றியும் மொழி முதலில் மட்டுமே உயிர் தனித்து நிற்கும். மொழியிடையிலும், இறுதியிலும் மெய்யுடன் கூடி உயிர் மெய்யாகவே அமையும். அளபெடை என்பது அவ்வவ் வெழுத்திற்குரிய மாத்திரை நீட்டி ஒலிக்கப்படுதலன்றி உயிர்கள் அடுத்தடுத்து நிற்றலன்று. தழீஇக் கோடல் – என்புழி, ழீ என்பதன் ஈகாரம் அதற்குரிய இரண்டு மாத்திரையினுங் கூடுதலாக மேலுமிரண்டு மாத்திரையளவு நீட்டியொலிக்கப்படுதலன்றி, தழீ–இ–இ– என இகரங்கள் அடுத்தடுத்து ஒலிக்கப்படுதலில்லை. அவ்வாறொலிப்பார் பொருளறிவாரா? மழலையரென்க. எனவே, அளபெடையில் ஒன்றுக்கு மேற்பட்ட உயிர்கள் அடுத்தடுத்து நிற்றலாகக் கருதுதல் முற்றுந் தவறாகும்.

அடுத்து, இரண்டு சொற்கள் இணையுங்கால், நிலைமொழியிறுதியும், வருமொழி முதலும் உயிர்களாக அமைதல் உண்டு. அந்நிலையில் என்னாகும்? ஒன்றாக, இரண்டு சொற்களும் இணைத் தொலிக்கப் பெறாது, விட்டிசையாகத் தனித்தனிச் சொற்களாகவே ஒலிக்கப் பெறும். விடை இல்லை, நல்லது அல்ல, அது அல்ல உண்மை – எனக் காண்க.

அல்லது, நிலைமொழியிறுதி உயிர், மெய்விட்டொழிய, எஞ்சும் மெய்யுடன் வருமொழி உயிரேறி உயிர் மெய்யாக, இரு சொற்களும்

இணைத்தொலிக்கப் பெறும். நிலைமொழியிறுதி, குற்றுகரமாயின் உயிர்வருங்கால் மெய் விட்டொழிதலே பெருவழக்காகிறது.

பாடறியேன், பாட்டறியேன், பண்பறிவேன், சால்பறிவேன், எளிதல்ல, எஃகல்ல - எனக் காண்க. நிலைமொழியிறுதி முற்றுகரமாயின் மெய்விட்டொழிதல் சிறுபான்மையாகிறது. அதனை, அதனால், அதற்கு, அதனது, அதன் கண் எனவும், களவியல், உளவியல், கதவடைப்பு எனவும் காண்க. முற்றுகரமும் மெய்விட்டொழியும் என்பதை,

**சுட்டுமுதல் உகரம் அன்னொரு சிவணி**
**ஒட்டிய மெய்யொழித் துகரங் கெடுமே** - தொல்.

என விதி வகையானும், களவும், பிரிவும், அளவியல் என உடம்படு புணர்த்தலாகவும் தெளிவுறுத்தினார் ஆசிரியர். பிற உயிர்கள் உடம்படு மெய் பெறுதல், பலவுண்டு, நிலாவில், தடியெடு, ஈயென, அணுவினுக்கணுவாய், பூவழகு, நன்றேயெனினும், சேவடி, விடையில்லை, அய்யோவென்றான் - எனக் காண்க.

அல்லது, நிலைமொழியிறுதியும், வருமொழி முதலும் உயிராகுங்கால் வருமொழி முதலுயிர் கெட்டு முடிதலும் உண்டு. மரத்தை என்பதை மரம் அத்து ஐ - எனக் கொண்டு, மரம் என்பதன் மகரவொற்றுக் கெட்டு, மர அத்து ஐ என நிற்க, மரஅத்து என்பவற்றில் வருமொழி முதலாகும் அகரங் கெட்டு, மரத்தை என முடிவதாகக் கொள்கிறார் ஆசிரியர்.

இனி, பாங்கருஞ்சிறப்பு, மாற்றருங்கூற்றம், செப்பருங்குணம் - என்னும் தொடர்களை பாங்கு அருஞ்சிறப்பு, மாற்று அருங் கூற்றம் செப்பு அருங்குணம் எனப் பிரித்தலுந்தகுவதே. ஆயின், சென்ற ஆண்டு - சென்றாண்டு, கடந்த ஆண்டு - கடந்தாண்டு, இந்த ஆண்டு இந்தாண்டு, இந்த ஆள் - இந்தாள், அந்த ஆள் - அந்தாள், இந்த ஆயிரம் - இந்தாயிரம் என்னும் வழக்காற்றை நோக்க, நிலைமொழி யிறுதி யுயர் கெட்டு முடிதலும் உளதாகின்றது.

இனி, அடுநை, விடுநை, விடுநர், கூறுநர், செறுநர், பொருநர், அறிஞர், இளைஞர், கலைஞர், வலைஞர், வினைஞர் என்றாற் போலும் பழந்தமிழாட்சிகளை நோக்க, யகர, வகரங்களேயன்றி, ஞகர, நகர மெய்களும் உடம்படுமெய்யாதல் தமிழ் மரபில் உண்டென்பது

தெளிவாகின்றது. இவற்றை உடம்படு மெய்யல்லாத கொள்ளுதற்குரிய விதி தொல்காப்பியத்தில் யாண்டுமில்லை. அவ்வாறே, ஞர், நர் – என்பவற்றைப் பெயர் – அல்லது வினை விகுதிகளாகக் கொள்ளுதற்கும் தொல்காப்பியத்தில் இடமில்லை. இவ்வாறாக, உடம்படுமெய்கள் பலவாதலும், யகர, வகரங்களைத் தவிர்த்துப் பிறவற்றை வகைப்படுத்துதல் அரிதாதலும் எண்ணியே ஆசிரியர்,

"உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்"

என்றளவில் நின்று கொண்டார். இந்நுட்ப முணர மாட்டாத பவணந்தியார், உடம்படு மெய்கள் யாவை என விதந்தோத முற்பட்டு, யகரவகரங்களை மட்டும் வரைந்தோதியமை குன்றக் கூறலென்னுங் குற்றமென்க.

இவ்விடத்தே இன்னொரு மயக்கந்தெளி வித்தலும் தேவையாகின்றது. உடம்படுமெய் பெறவாகும் நிலைமொழி, வருமொழியிரண்டும் தனித்துப் பொருள்தரும் சொற்களாதலே உடம்படுமெய்யின் அடிப்படையென்னும் கருத்துரை முற்றும் மயக்கவுரையென்க.

தலை என்பது ஓர் உறுப்பின் பெயர். அதனொடு அன் சேர்ந்து தலைவன் என்றாங்கால், தலைவன் என்பது தலைமைத் தன்மையன் என ஓர் ஆளன் பெயராகின்றது. உறுப்பின் பெயரை உறுப்பொத்த ஆளன் பெயராக்குதல் உயிர்ப் பொருளல்ல எனல் பொய்ப் பொருளன்றி மெய்ப் பொருளாகாது. அ–அன் இரண்டும் தனித்துப் பொருள் தருவனவல்ல. அவையிரண்டும் சேர்ந்து அவன் என்றாகும் போதுதான் அகரம் சுட்டுப் பொருளும், அன் – திணைபால், எண், இடமும் உணர்த்துவனவாகின்றன. தலைவன், அவன் என்பவற்றின் வகரமெய் உடம்படு மெய்யல்ல எனின், அது வேறு எது? அதனை வேறொன்றாகக் கொள்ளுதற்குரிய விதி தொல்காப்பியத்தில் யாண்டுளது?

இடைச் சொற்கள் தனித்தியங்காதவை என்பதும், தனித்துப் பொருள் தர மாட்டாதவை என்பதும் சரியே. ஆனால் அவை பெயரொடும், வினையொடும் சாரும் போது தமக்கெனப் பொள் தருவனவல்லவோ? இடைச் சொற்களை ஏழுவகையாகப் பட்டியலிடும் ஆசிரியர், அவை பெயரொடும், வினையொடும் சேருங்கால், புணரியல் பொருள் நிலைக்குதவுதல்,

வினையின் திணை, பால், எண், இடம் உணர்த்துதல், பெயர்ப் பொருளைச் செயப்படு பொருளாகவும், கருவிப் பொருளாகவும், ஏற்றுக் கோடற் பொருளாகவும், ஒப்புப் பொருளாகவும், கிழமைப் பொருளாகவும், இடப் பொருளாகவும் வேற்றுமை செய்தல், அசைத்தலாதல், இசைத்தலாதல், குறிப்புப் பொருளாதல், ஒப்புமை விளக்குதல் என பெயர், வினைகளின் பொருள் விளக்கத் துணையாதலையும் விவரித்துக் கூறுகின்றார். அவையனைத்தும் தொல்காப்பியப் பெருநூலைக் கவனமாகப் படித்தால் புலனாகும். இடைச் சொற்கள் உயிர்ப் பற்றவை எனல் தமிழின் உயிர்மையை வெறுமையாக்கும் வெற்றுரையெனத் தெளிக. ஆங்கில மொழியில், Prefix, Suffix என்பன தமிழ் இடைச் சொற்கள் போன்றவையன்றி வேறல்ல.

ஆக, நிலைமொழியிறுதியும், வருமொழி முதலும் உயிர்களாக அமையுங்கால் அவற்றை, விட்டிசையின்றி இணைந்தொலிக்கச் செய்தல் - உடம்படாத உயிர்களை உடம்படுத்துதல் என்பது தான் அடிப்படையேயன்றி, நிலை மொழியும் வருமொழியும் பெயரா - வினையா - இடையா - தொடையா - தனித்து நிற்பதா - கூட்டணி அமைப்பதா என்பன அடிப்படையல்ல. தொல்காப்பியத்தை மறத்தலும் மறுத்தலும் தகவல்ல.

ஆக, தமிழில் இரண்டுயிர்கள் இணைந்தொலித்தல் இல்லவே இல்லை. நிலைமொழியிறுதி - வருமொழி முதல் என உயிர்கள் எதிர் நிலையாகும் போது, இணைந்தொலிக்க உடன்பட மாட்டாத உயிர்களை இணைந்தொலிக்கும்படி உடன்படுத்தும் மெய்யே உடம்படுமெய் என்னும் அடிப்படைத் தெளிவுடன் பிறமொழி குறித்த ஒப்பாய்வில் தலைப்படலே பயன் தருவதாகும்.

மேற்கண்டவாறு உடம்படுமெய் என்று தன் அடிப்படையில் ஆங்கில மொழியியல்பைக் கவனிப்போம். ஆங்கிலத்தில் our, auction, aunt, each, eat. oust, aeroplan, airport, oat, oath, out - என்றாற்போலும் மொழி முதலிலும், colour, threat, bought, daughter, beach, piece, soup, scoop, dead, head, chair, hair, court, board என்றாற்போல் மொழியிடையிலும் Coloric, die, Thou, Tea என்பன போல் மொழியிறுதியிலும் ஒன்றுக்கு மேற்பட்ட உயிர்கள் அடுத்தடுத்து நிற்றல் அருவழக்கன்று; பெருவழக்காகின்றது. இவையனைத்தும் விட்டிசைத்தல், இடையில் மெய்யொலி பெறுதல் இரண்டுமின்றி இணைந்தொலிததல் உளங்

கொளத்தக்கது. அன்றியும், Deep, Green, Cool, Good என ஒரே உயிர் அடுத்தடுத்து நின்று, இணைந்தொலித்தலும் காண்க.

நிலை மொழியிறுதியும் வருமொழி முதலுமாய் உயிர்கள் எதிர் நிலையாகும் போழ்தன்றோ உடம்படு மெய்கள் தோன்றுமெனலாம். அவ்வகையாலும் ஆங்கில ஒலிப்பியல் ஒவ்வாமையாகின்றது.

| | |
|---|---|
| go after | Re elect |
| go ahead | Re enter |
| go against | Re export |
| go arround | Re issue |
| go out | Re iterate |
| go over | Re order |
| go up | Re organize |
| | Re unite |
| | Re use |

ஆக, சொற்களின் புணர் நிலையிலும் மெய்யொலியின்றி விட்டிசைத்தலே காண்கிறோம்.

ஆயினும் ஆங்கில ஒலிப்பியலில் உயிர்களுக்கிடையில் மெய்யொலி தோன்றுதல் முற்றாகவிலதோவெனின் அற்றன்று. அருவழக்காக உயிர்களுக்கிடையில் மெய்யொலி தோன்றுதலும் உளதாகின்றது. ஆனால், அவற்றில் ஒழுங்குறு நீர்மையில்லை.

Creat, Dear, Near - என்றாற் போல்வனவற்றில், e-a இரண்டிற்குமிடையில் யகர மெய்யொலி தோன்றத்தான் செய்கிறது. ஆனால், Deen, Great என்பவற்றில் யகர மெய்யைக் காணவில்லை. Client, Orient - என்பவற்றில் i - e, இரண்டிற்கிடையே யகர மெய்தலை காட்டுகிறது. ஆனால், Piece, Series என்பவற்றில் யகர மெய்க்கு இடமில்லை. Folio, idiom, Radio - என்பவற்றில், i - o, இரண்டின் நடுவில் யகர மெய் இல்லையெனலாகாது. ஆனால், Nation, Commission - என்பன அவ்வாறில்லை. Coin, Oil, Point - o - i, இரண்டும் யகர மெய்யொலிக்கு இடமளிப்பதாகக் கூறலாம். ஆயின், Choir, Soiree - என்பவற்றின் ஒலிப்பில்

வகர மெய்யன்றோ தலைநீட்டுகின்றது? ஆனாலும், Airial, Dial, Serial என, i - a, இரண்டிற்கிடையிலும் Calcium, Radium, Sodium - என, i - u, என்பவற்றுக்கிடையேயும் யகர மெய் தோன்றுதல் ஓர் ஒழுங்குறு நிர்மையாகத் தோன்றுகிறது. அதே போழ்தில், Sodium என்பதில், o - d, என உயிர் மெய்க்கிடையில் வகர மெய்யும் தோன்றுதல் கவனத்திற்குரியது.

Clause, Coalition, Annual, Quick, Question என்றாற்போல்வனவற்றில், a - u, இரண்டினிடையும், o - a, இரண்டிற்கிடையிலும் u - a இரண்டின் நடுவாகவும், u - i, என்பவற்றிற்கிடையிலும், u - e என்னும் இரண்டின் நடுவிலும் வகர மெய்யொலி தோன்றத்தான் செய்கிறது. ஆனால், Daughter, Coal, Guard, Suit, Quest என்பவற்றில் அதே உயிரிணைகள் விட்டிசையும், இடையிடும் மெய்யொலியுமின்றி இணைந்தொலிக்கின்றன. அம்மட்டோ?

Mere, Severe, Sincere, Fire, Tier, Wire - என்பவற்றில், e - r, எனவும், i - r எனவும் உயிர்-மெய்க்கிடையே யகர மெய் தலைகாட்டுகிறது. Metre, Theatr என்பவற்றில் t - r எனும் மெய்களுக்கிடையே எகர உயிரன்றோ தோன்றுகிறது? News - என்பதில், w - s – எனும் மெய்களுக்கடையில் யகர ஊகாரம் தோன்றும் விந்தையை என்னென்றியம்ப? இதற்கு மேலும் இதற்குள் தலையைக் கொடுத்தால் தலை சுற்றுகிறது.

மொழி என்பது குறிப்பிட்ட ஒலிகளைக் குறிப்பிட்ட முறையில் இணைத்தும், பிணைத்தும் குறிப்பிட்ட ஒலிப்புடன் குறிப்பிட்ட பொருளுணர்வில் பயன்படுத்தும் ஒலிக்கட்டமைப்பன்றி வேறல்ல. தமிழ் என்பது உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டுமாக முப்பது ஒலிகளைக் கொண்டது. ஒவ்வொரு ஒலிக்கும் ஒவ்வொரு வரிவடிவம். மெய்யும், உயிரும் இணையும் கூட்டொலிக்குத் தனி வடிவம். எனவே, ஓரொலிக்கு ஓரெழுத்து; ஓரெழுத்திற்கு ஓரொலி எனத் தெளிவான ஒழுங்குமுறை. ஆனால் ஆங்கிலத்தில் இந்த அடிப்படையே தகர்கின்றது. தமிழ் உயிரொலிகள் பன்னிரண்டும் ஆங்கிலத்தில் உண்டு. அதே போது மெய்யொலிகள் பதினெட்டிற்கும் மேலாக முப்பது எனுமளவுக்குக் கூடுதலாகின்றன. ஆனால், பன்னிரண்டு உயிரொலிகளுக்கு வரிவடிவங்கள் அய்ந்து, முப்பது

மெய்யொலிகளுக்கு இருபத்தொரு வரிவடிவங்கள் என இரண்டுமே குறைவுபடுகின்றன. ஆனாலும் உள்ளது கொண்டு நல்லது செய்தல் எனும் முறையைப் பின்பற்றினால் குழப்பம் குறையும். அதாவது ஒவ்வொரு வரிவடிவ எழுத்தும் இன்னின்ன ஒலிகளுக்கு மட்டும் என வரையறுத்துக் கொள்ளாமல், ஓர் ஒலிக்கு வெவ்வேறு வடிவங்கள், ஒருவடிவத்திற்கு வெவ்வேறு ஒலிகள் எனக்குழப்பிக் கொள்கிறார்கள். மெய்யெழுத்து வடிவங்களில் ஒன்று அம்மையப்பனாக, மெய், உயிர் என இருதிறமாதலும் சேர்கின்றது. y – என்னும் மெய்யெழுத்து, இகர, ஐகார உயிரொலிகளுக்கும் பயன்படுகிறது. Any, Syllabus எனவும், By, Fly, Paralyse எனவும் காண்க. இதற்குமேலும் இதற்குள் தலையைக் கொடுத்தால் தலையே காணாமற் போகலாம். மனிதரில் சிலரை நாணமற்றவர் என்கிறோம். மொழிகளில் நாணமற்ற மொழி ஆங்கிலம் எனல் தவறாகாது.

இனி, மற்றொரு மயக்கந் தீர்த்தலும் தவிர்க்க மாட்டாததாகின்றது. உடம்படு மெய்யாவது, உடம்பட மாட்டாத இரண்டுயிர்களுக்கிடை புகுந்து, இரண்டுயிர்களும் நிலைத்து நின்று ஒலிக்கச் செய்வதன்றி, உயிர்களை நீக்குவதுமல்ல; மாற்றுவது மல்ல. California - Kaluhfaunyuh என்னும் ஒப்பீட்டில், a-u வாக மாறுகிறது. au என இரண்டுயிர்கள் புதுவனவாக இடைபுகுந்து இரண்டும் ஒட்டி நிற்கின்றன. ia இரண்டுயிர்களையும் வலை வீசித் தேடலாகின்றது. Tie-ing = Tying என்பதில் இடை புகுந்த y என்னும் மெய், ie எனும் இரண்டுயிர்களையும் ஒழித்துக் கட்டித், தான் மட்டும் சம்மணம் போட்டு உட்கார்ந்து கொள்கிறது. அறுவைச் சிகிச்சை வெற்றி; – நோயாளி செத்தார் என்னுங் கதையாக ஈதென்ன கொடுமை? நல்லவேளை, Peru-ian = Perurian என்பதில் ia இரண்டுயிர்களும் நலுங்காமல் குலுங்காமல், AVM - இரட்டையர் போல் இணையாக நிற்கின்றன. அந்தமட்டில் மகிழ்ச்சி கொள்வோம்.

குதிரையின் கண்களுக்குப் பக்கத் திரையிடுதல் வழி மாறாமைக்குத் துணையாகலாம். ஆய்வுக் கண்ணுக்குப் பக்கத் திரையிடுதல் வழி பிறழ்வதாக முடியும்.

# யார் நல்லாசிரியன்?

டாக்டர் வ.க. கன்னியப்பன்
கண் மருத்துவர்

இன்றைய சூழ்நிலையில் தனியார் மற்றும் அரசு கல்விக் கூடங்கள், தொழில் சார்ந்த பள்ளிகள், கல்லூரிகள் பல்வேறு நிலைகளில் பெருகியுள்ளன. அவற்றிற்கான ஆசிரியப் பள்ளிகளும், ஆசிரியத் தேவைகளும் பெருகிவிட்டன. ஆயிரக்கணக்கான பேர், ஆண்களும், பெண்களும் போட்டித் தேர்வுகள் எழுதிப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் அனைவருமே மாணவ மாணவியர்க்குக் கல்வி கற்பிக்கத் தகுதியும், திறமும் படைத்தவர்கள்தானா? என்பது ஒரு கேள்விக்குறி.

வருடந்தோறும் அரசாங்கத்தால் நல்லாசிரியர் விருது பலருக்கும் வழங்கப்படுகிறது. யார் நல்லாசிரியன்?, அவரது குணாதிசயங்கள் எத்தன்மையதாக இருக்கவேண்டும்? என்று நன்னூலில் கூறப்பட்டிருக்கிறது என்று பார்ப்போம்.

## நல்லாசிரியனின் இலக்கணம்

குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே (பாடல் 26)

## பதவுரை

குலன் – உயர்குடிப்பிறப்பும்
அருள் – ஜீவகாருண்யமும் (உயிர்களிடத்தில் அன்பும்)
தெய்வம் கொள்கை – கடவுள் நம்பிக்கையும், வழிபாடும்
மேன்மை – பெருந்தகைமையும்
கலைபயில் தெளிவு – பல நூல்களில் பயின்ற தேர்ச்சியும்
கட்டு உரை வன்மை – மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி,

தொடுத்துச் சொல்லுகின்ற சொல்வன்மையும் ( கற்றுத்தரும் வல்லமை)

நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும் - பூமியையும் மலையையும், தராசுக் கோலையும், பூவையும் ஒத்த உயர்ந்த குணங்களும்

உலகு இயல் அறிவோடு - உலகத்தில் உள்ள நன்மை தரும் செயல்களை அறிந்திருக்கின்ற அறிவுடனும்,

உயர் குணம் இனையவும் – இவை போன்ற மிக உயர்ந்த குணங்கள் அனைத்தும் சேர்ந்து, அமைபவனே - பொருந்தியிருக்கப் பெற்றவனே.

நூல் உரை ஆசிரியன் – நூலைக் கற்பிக்கும் நல்லாசிரியனாவான்.

## கருத்துரை

உயர்குடிப்பிறப்பும், உயிர்களிடத்தில் அன்பும், கடவுள் நம்பிக்கையும் வழிபாடும். இவைகள் அளித்த பெருந்தன்மையான குணமும், பல நூல்களில் பயின்ற தேர்ச்சியும், மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி, தொடுத்துச் சொல்லுகின்ற ( கற்றுத்தரும் திறனும் ) சொல்வன்மையும், பூமியையும், மலையையும், தராசு கோலையும், பூவையும் ஒத்த உயர்ந்த குணங்களும், உலகத்தில் உள்ள நன்மை தரும் செயல்களை அறிந்திருக்கின்ற அறிவும், இவை போன்ற மிக உயர்ந்த குணங்கள் அனைத்தும் சேர்ந்து பொருந்தியிருக்கப் பெற்றவனே நூலைக் கற்பிக்கும் நல்லாசிரியனாவான்.

## நல்லாசிரியனின் குணாதிசயங்களுடன் நிலம், மலை, நிறைகோல், மலர் மாட்சி உவமை

நல்லாசிரியனின் குணாதிசயங்கள் எத்தன்மையதாக இருக்கவேண்டும் என்று நன்னூலில் கூறப்பட்டிருக்கிறது. அதில் நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும் நல்லாசிரியனுக்கு அமையப்பட வேண்டிய குணமாகச் சொல்லப்படுகிறது. எனவே நிலம், மலை, நிறைகோல், மலர் மாட்சி என்னவென்றும், அவைகள் நல்லாசிரியனுக்கு எங்ஙனம் உவமையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன என்றும் கீழேயுள்ள பாடல்களில் காண்போம்.

## நிலமாட்சி

தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்

மருவிய நன்னில் மாண்பா கும்மே (பாடல் 27)

## பதவுரை

தெரிவு அரு - ஓரிடத்தில் நின்று நிலம் முழுவதும் காண்பதற்கு ஏதுவான அருமையான,

பெருமையும் - நிலப் பரப்பின் (உருவப் பரப்பின்) பெருமையும்,

திண்மையும் - உழுவதற்குத் தோதான மனிதர்கள், கலன்கள், எருதுகள் ஆகியவை பாரமாகத் தன் மேல் அழுந்தினாலும் கலங்காத வலிமையும்,

பொறையும் - தன்னைப் பண்படுத்த மனிதர் ஆழ உழ, தோண்ட முதலிய குற்றங்களைச் செய்தாலும் பொறுக்கின்ற பொறுமையும்,

பருவம் முயற்சி அளவின் பயத்தலும் - தக்க பருவத்திலே உழவர் செய்கின்ற முயற்சி அளவுக்குத் தகுந்தபடி அவர்க்குப் பயன் கொடுத்தலும்,

நல் நிலம் மருவிய மாண்பு ஆகும் - நல்ல நிலத்திற்குப் பொருத்தமான நற்குணங்களாகும்.

## கருத்துரை

ஓரிடத்தில் நின்று நிலம் முழுவதும் காண்பதற்கு ஏதுவான அருமையான நிலப் பரப்பின் (உருவப் பரப்பின்) பெருமையும், உழுவதற்குத் தோதான மனிதர்கள், கலன்கள், எருதுகள் ஆகியவை பாரமாகத் தன் மேல் அழுந்தினாலும் கலங்காத வலிமையும், தன்னைப் பண்படுத்த மனிதர் ஆழ உழ, தோண்ட முதலிய குற்றங்களைச் செய்தாலும் பொறுக்கின்ற பொறுமையும், தக்க பருவத்திலே உழவர் செய்கின்ற முயற்சியளவுக்குத் தகுந்தபடி அவர்க்குப் பயன் கொடுத்தலும் நல்ல நிலத்திற்குப் பொருத்தமான நற்குணங்களாகும்.

அதுபோல, பிறரால் வகுத்து அறியப்படாத கல்வியறிவும் பெருமையும், பெரிய வாதம் செய்து பிறர் தன் மேல் நெருக்கினாலும் கலங்காத வல்லமையும், அடுத்தவர் தன்னை இகழ்தல் முதலிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கும் பொறுமையும், மாணவர்கள் செய்யும் முயற்சியின் அளவிற்குத் தகுந்தபடி அவர்களுக்குப் பயனைத் தருதலும் ஆசிரியனுக்குப் பொருந்தும் குணங்களாதலால், நிலம் அவனுக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது.

## மலைமாட்சி

அளக்க லாகா வளவும் பொருளுந்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே (பாடல் 28)

## பதவுரை

அளக்கல் ஆகா – அளக்க முடியாத

அளவும் – அதன் முழு வடிவத்தின் அளவும்

பொருளும் – அம்மலையில் உள்ள பல்வகைப் பொருள்களும்,

துலக்கல் ஆகா நிலையும் – எவ்வளவு வலிமை உடையவர்களாலும் அசைக்க முடியாத உருவத்தின் நிலைமையும்,

தோற்றமும் – நெடுந்தொலைவிலிருந்தும் காணப்படுகின்ற உயரமும்

வறப்பினும் வளம் தரும் வண்மையும் – மழையே இல்லாமல் வறண்டு போனாலும் மலையிலுள்ள மரங்களுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் நீர்வளத்தைக் கொடுக்கின்ற கொடையும்

மலைக்கே – மலைக்கே உள்ள நற்குணங்களாகும்.

## கருத்துரை

அளக்க முடியாத அதன் முழு வடிவத்தின் அளவும், அம்மலையில் உள்ள பல்வகைப் பொருள்களும், எவ்வளவு வலிமை உடையவர்களாலும் அசைக்க முடியாத உருவத்தின் நிலைமையும், நெடும் தொலைவிலிருந்தும் காணப்படுகின்ற உயரமும், மழையே இல்லாமல் வறண்டு போனாலும் மலையிலுள்ள மரங்களுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் நீர்வளத்தைக் கொடுக்கின்ற கொடையும் மலைக்கே உள்ள நற்குணங்களாகும்.

அதுபோல, அளவு காணமுடியாத கல்வியினளவும், பலவகை நூற்பொருள்களும், எப்படிப்பட்ட புலமையுடையவராலும் அசைக்கப்படாத கல்வியறிவின் நிலையும், நெடுந்தூரத்தில் உள்ளோராலும் அறியப்படும் உயர்வும், பொருள் வருவாய் குறைந்தாலும் தன்னைச் சார்ந்துள்ள மாணவர்களுக்கு கல்வியை குறைவிலாது கொடுக்கும் கொடையும் ஒரு நல்ல ஆசிரியர்க்கு உள்ள குணங்களாகும். எனவே, மலையை ஆசிரியனுக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது.

## நிறைகோல்மாட்சி

**ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலும்**

**மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே - (பாடல் 29)**

## பதவுரை

பொருளை ஐயம் தீர உணர்த்தலும் - நிறுக்கப்பட்ட பொருளின் அளவைச் சந்தேகம் தீரக் காட்டுதலும்,

மெய் நடு நிலையும் - உண்மை பெறத் தான் இரண்டு தட்டுக்கும் நடுவே ஒருபக்கம் கோணாமல் நிற்றலும்,

நிறைகோற்கு மிகும் - நல்ல தராசுக்கோலுக்கு உண்டான மிக்க நற்குணங்களாகும்.

## கருத்துரை

நிறுக்கப்பட்ட பொருளின் அளவைச் சந்தேகம் தீரக் காட்டுதலும், உண்மை பெற, தான் இரண்டு தட்டுக்கும் நடுவே ஒருபக்கம் கோணாமல் நிற்றலும் நல்ல தராசுக்கோலுக்கு உண்டான மிக்க நற்குணங்களாகும்.

அதேபோல், தான் நூல்களில் கற்ற பாடங்களிலிருந்து கேட்கப்பட்ட சொற்பொருளின் இயல்பை சந்தேகம் தீர விளக்கி உணர்த்தலும், புலவர் இருவர் மாறுபட்டாராயின் உண்மையைப் பெற தான் அவ்விருவர்க்கும் நடுவாகப் பாரபட்சமின்றி நிற்றலும் நல்ல ஆசிரியர்க்கு உள்ள குணங்களாகும்.

மாணவர்கள் பலருள் ஒருவனிடத்து விருப்பாகவும், ஒருவனிடத்து வெறுப்பாகவும் இல்லாமல் ஆசிரியர் நடுவுநிலையாக இருக்க வேண்டும். எனவே, நிறைகோல் ஆசிரியனுக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது.

## மலர்மாட்சி

**மங்கல மாகி யின்றி யமையாது**

**யாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்**

**பொழுதின் முகமலர் வுடையது பூவே (பாடல் 30)**

## பதவுரை

மங்கலம் ஆகி – சுபகாரியங்களுக்கு உரியதாய்,

இன்றிய அமையாது - அலங்கரிப்பதற்கு அவை இல்லாமல் முடியாததாய்,

யாவரும் மகிழ்ந்து மேல் கொள - காண்பவரெல்லாம் விரும்பி, மகிழ்ந்து கூந்தலிலும், கழுத்திலும் மேலாகத் தன்னைச் சூடிக் கொள்ள,

மெல்கி – மென்மையான குணமுடையதாய்,

பொழுதில் முகம் மலர்வு உடையது - மலர்வதற்கு உரிய நேரத்தில் மலரக்கூடிய வண்ணம் தோற்றமுடையது

பூவே – பூவின் குணமாகுமாம்.

## கருத்துரை

அலங்கரிப்பதற்கு (இல்லாமல் முடியாத) முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், காண்பவரெல்லாம் விரும்பி, மகிழ்ந்து கூந்தலிலும், கழுத்திலும் மேலாகத் தன்னைச் சூடிக் கொள்ள மென்மையான குணமுடையதாகவும், மலர்வதற்கு உரிய நேரத்தில் மலரக்கூடிய வண்ணம் தோற்றமுடையதாகவும் உள்ளதே பூவின் குணமாகுமாம்.

அதேபோல், சுபகாரியத்திற்கு உரியனவாய்ச் சிறப்பிக்க, தான் இல்லாமல் யாதொரு செய்கையும் முடியாததாகக் காண்பவரெல்லாம் விரும்பி மேலான நிலையில் தன்னை வைத்துக் கொள்ள மெல்லிய குணமுடையவனாகவும், பாடம் சொல்லுவதற்குரிய காலத்தில் முகமலர்ச்சி உடையவனாகவும் இருப்பது ஆசிரியனுக்கு மேலான குணமாதலால், பூ ஆசிரியனுக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது.

## முடிவுரை

இன்று ஆசிரியத் தொழில் செய்பவர்களும், நல்லாசிரியர் விருது பெறுபவர்களும் ஆசிரியத் தொழிலுக்கு உண்மையாகவும், நேர்மையாகவும் பணியாற்றுகிறோமா? என்று தங்களுக்குத் தாங்களே சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

# நூல்

ஆறுவிரல் ஐம்பொறி

ஒழுங்குடனும் அழகுடனும் அடுக்க டுக்காய்
ஒருதாங்கி யில்நூல்கள் சாய்ந்து நிற்கும்
இழுத்தெண்ணி விழிப்புடனே பொறுமை யாக
எடுத்திட்ட ஒருநூலைத் திறந்தால் உள்ளே
எழுத்துக்கள், சொல்,தொடர்கள், பாத்தி, பக்கம்,
ஏடுகளும் நன்றாகத் தெரியக் காண்போம்
முழுநூலில் இவையெல்லாம் எஃகி னைப்போல்
முப்பால்போல் செறிவுடனே அமைய வேண்டும்.

சுளைபோன்ற ஓரெழுத்தில் செறிவு வேண்டும்
சொற்களுக்கே அதுநிகராய் அமைய வேண்டும்
கலையீட்டும் ஒருசொல்லில் செறிவு வேண்டும்
கற்றொடர்கட் கதுநிகராய் அமைய வேண்டும்
நிலைபெற்ற ஒருதொடரில் செறிவு வேண்டும்
நீள்பாத்திக் கதுநிகராய் அமைய வேண்டும்
இலைப்பகுதி பாத்தியிலே செறிவு வேண்டும்
எண்பக்க மதுநிகராய் அமைய வேண்டும்.

அருங்களமாம் பக்கத்தில் செறிவு வேண்டும்
ஆறேட்டுக் கதுநிகராய் அமைய வேண்டும்
இருபக்க ஏடொன்றில் செறிவு வேண்டும்
எழுநூலுக் கதுநிகராய் அமைய வேண்டும்
உருவாகும் ஒருநூலில் செறிவு வேண்டும்
நூலகத்திற் கதுநிகராய் அமைய வேண்டும்
கருத்துக்கள் செறிவுள்ள நூலே வேண்டும்
காலமெலாம் அந்நூலே நிலைக்க வேண்டும்.

# கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் வருணனை உத்திகள்

ந. ராஜகுமார்
அண்ணாமலைநகர்

பாடுபொருளுக்கும் இலக்கிய வகைக்கும் ஏற்ப உத்திகள் மாறுபடலும், புதுவகை உத்திகள் உருவாகலும், தனிவகை உத்திகள் பயில்வதும் இயல்பாக அமைகின்றன. இவ்வடிப்படையில் காணின், தனித்த உத்திகள் அமையும் வாய்ப்பும் காவிய வருணனைக்கு புலப்படுகின்றது. கண்ணதாசனும் இதற்கு விதிவிலக்கு அன்று. இந்நிலையில் பாடல் ஆக்கத்திற்குப் பயன்படும் மரபு உத்திகள் பயில்வது ஒரு பாலாக, அவ்வாறின்றிக் கவிஞனின் ஆளுமைக்கும் ஆற்றலுக்கும் ஏற்பப் புதுவகை உத்திகள் ஆக்கப்பட்டுப் பயிற்சி கொள்வதும் காணப்படலாம்.

திரையிசைப் பாடல்கள் பற்றிய ஆய்வு நிகழ்த்துவோர் இவ்வுத்திகளை உணர்ந்து கூற வாய்ப்பு உண்டு. மேனாட்டுக் காப்பியக் கல்வியில் எழுந்த நூல்கள், தெளிவாக இத்தொடர்பின் பல எண்ணங்களைத் தருவது, இத்துறையில் நம்மை ஊக்குவதாக உள்ளது. தமிழ்மொழியிலும் பண்டே இவ் ஆய்வு பற்றிய முயற்சிகள் அமைந்ததைத் தொல்காப்பியம், தண்டியலங்காரம் போன்ற அணி, இலக்கண நூல்களின் வழி அறியலாம்.

## மேனாட்டார் எண்ணம்

வீரயுகக் கவிதைகளைப் பற்றிய சி.எம். பௌராவின் ஆய்வு கவிதையிலக்கிய வகைக்குரிய பல்வகை உத்தி எண்ணங்களை ஆங்காங்குத் தந்து செல்கின்றது. கம்பனையே அடிப்படையாக்கி, இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலாகக் காப்பிய உத்திகளைக் காணுதல் தேவை எனினும், அதனை உணருமுன், இம்மேனாட்டார், ஆய்வுப்படியும் பொருந்திக் காணலாம் எனும் வாய்ப்பைப் புலப்படுத்தும் பாங்கில் இக்கருத்து இணைவுகள் தரப்படுகின்றன.

கதையை விரிக்கும் அடிப்படையில் உத்திகளாகிய கருவிநிலை பற்றிய எண்ண விரிவு இதன் கண் அமைகின்றது. தலைவனின் வருகையும்

புறப்பாடும் (arrival, departure) இதன் ஒருவகையாக அமைகின்றது. தலைவனைச் சார்ந்தும் சூழ்ந்தும் கதை செல்வதால் அவன் வரவும் போக்கும் கூட இன்றியமையாச் செயலாகி முதன்மை இடம் பெறும்படி அமைத்தலின் தேவை இதனை உத்தியாக்குகின்றது.

பாத்திரங்களின் வருகையும் செல்கையும், தொடர்ந்து வரும் நிகழ்வுகளுக்கு வாயிலும் வழியுமாகையால் இவை உறுப்பு முதன்மை பெறுகின்றன.

பல் நிலைகளுக்கு வேறாக, இலக்கியத்தை இயற்றும் நிலையிலுள்ள உத்திகள் பற்றிய எண்ணங்களும் காணப்படுகின்றன. இதன்கண் மொழியடிப்படையில் உத்திகள் முதல் வகையாக இடம் பெறுகின்றன. ஒரு மக்கட் குழுவினைக் கேட்போராக முன் கொண்டு இயற்றும் காவிய நிலைப்படி, இதன் முதல் உத்தியாகக் கேட்போரை விளிக்கும் முன்னிலை மொழிப்பாங்கு அமைகின்றது. (Post addressing the public) "நான் கூறுவேன்", "நீங்கள் இனிக் காண்பீர்கள்", "நீங்கள் ஏற்கனவே அறிந்தீர்கள்" போன்ற முன்னிலை எண்ணத் தொடர்கள் இங்கு உத்தியாகப் பொருந்துகின்றன.

"வெந்த புண்ணில் வேல்" எனவும் "உள்ளங்கை நெல்லிக்கனி" போன்றும் வருவனவற்றை இவண் எண்ணலாம். யாப்பமைப்பின் தேவை கருதி, இப்பயிற்சித் தொடர்கள் மிகச் சிறு மாற்றம் பெறலாம் என்பதும் ஒரு எண்ணமாகும். எண்களும் இப்பகுதியில் உத்திநிலை எண்ணங்களுடன் காணப்படுகின்றன.

வாய்ப்பாட்டு நிலை என்பதற்கு நேர்மாறான பாங்கும் காணப்படலாம் என்பது ஆய்வாளர் கணிப்பு ஆகும். ஒரே பொருள் பலமுறை பலவிதமாகக் கூறப்படுதலாக இது அமைகின்றது. நிகழ்வு, செயல், வளன் போன்ற பலவற்றில் கண்ணதாசனிடமும் நாம் இதனைக் கண்டு சுட்டலாம். இயற்கைச் செய்தியோ, உருவ வருணனையோ மீண்டும் மீண்டும் வரும்போதும், வகைமை தோன்ற வெவ்வேறு விதமாகக் கூறப்படலில் இது பொருந்துகின்றது.

இலக்கியத்தை இயற்றும் நிலையிலுள்ள உத்திகளுள் மொழியடிப்படையின் இவ்வாறாக, அதன் பிறிதொரு பகுதியாகக் கூறுமுறை

உத்தி பற்றிய செய்திகளும் ஆய்வறிஞரால் தரப்படுகின்றன. எவ்வாறு தொடங்குவது?, எவ்வாறு முடிப்பது? எவ்வாறு மறைநிலை உருவாக்கி விருப்புறும் வண்ணம் விறுவிறுப்பாகக் கொண்டு செல்வது?, எவ்வாறு சலிப்புத் தவிர்த்துப் படைப்பின் நடையிலும் நயத்திலும் வகைமை வேறுபடுத்துவது? என்பது இதன்கண் அடங்குகின்றன.

## கண்ணதாசனின் காவிய வருணனைகள்

கருத்துக்கள் என்பதை நேரடியாகச் சொல்லாமல் உவமைகள் வாயிலாக கலந்து உரைப்பது கருத்துக்கு மெருகூட்டுவதோடு, உவமை என்பது வர்ணனை கலந்த கருத்துக்களை எடுத்துரைப்பதாகும். எனவே, சொல்லவரும் கருத்துக்களை எடுத்துரைப்பதாகும். எனவே சொல்லவரும் கருத்துக்களை அழகான வருணனைகளுடன், வரும் கருத்துக்களை உவமையுடன் உரைத்தல், கவிதைக்கு அழகு, இத்தகு கவிதைகள் அனைவர்க்கும் அதிகளவு இன்பத்தை ஊட்டவல்ல அரிய பொக்கிஷங்களாகக் கருதப்படும். இத்தகைய கவிதைகள் எந்த மொழியில் அதிகம் காணப்படுகிறதோ அந்த மொழி அதிகவளம் கொண்ட மொழி எனக் கருதப்படும்.

கண்ணதாசனது எந்தக் கவிதையை எடுத்தாலும் தனக்கென்று முத்திரைப் பதிக்கும் வண்ணம், தன் கற்பனைத் திறத்தால், அவர் வர்ணித்த அழகு, நினைக்குந்தோறும் இன்பம் ஊட்டுகிறது. இந்த வர்ணனையில், காதலனை காதலியை மட்டும் அல்லாது, இயற்கையையும், இறைவனையும் வர்ணித்த கவிதைகளுக்கு மெருகூட்டிய கவிஞன் கண்ணதாசனாகத்தான் இருக்க முடியும்.

## கண்ணதாசனின் வருணனை உத்திகள்

பாடல் என்பதும் பாட்டு என்பதும், வெறும் பொழுது போக்கிற்காக மட்டும் பாடப்பெறுவதன்று. மக்கள் பொழுது போகாத போதுதான் பாடலை அசை போடுகின்றனர் என்பதும் ஏற்க இயலாததாகவும் தெரிகிறது. ஏனெனில், நகரங்களில் வாழும் மக்கள் இயந்திர வேக வாழ்க்கையில் அன்றாட

அலுவல்களில் அல்லாடும் நிலையைக் காண முடிகிறது. எனவே, மக்கள் பொழுது போகாத நிலையில் உள்ளனர் என்பதும் ஏற்க இயலாத கருத்தாகும்.

எனவே, பாட்டு என்பது வெறும் பொழுது போக்கிற்காக மட்டும் பாடப்பெறுவதன்று. அது உள்ளத்தைத் தொட்டு உயிரை வளர்த்து உயர்நிலைக்கு, அதை ஏற்றிச் செல்வதாகும்.

தம்மை மறந்து இறைவனைப் பாடிய மாணிக்கவாசகர்,

'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவர்' செல்வர் என்கிறார். பொருள் உணர்ந்து சொல்லுபவர், இவ்வுலகில் அருட்செல்வராக, பொருட்செல்வராக, செல்வத்துட் செல்வராக வாழ்வார் என்று பொருள் கொள்வதில் தவறில்லை.

இசை, பண், பாடல் என்கின்ற போது உள்ளம் நெகிழ்கின்றது. உவகையில் ததும்புகிறது. நாக்கு அதன் தன்மையான வாழ்வளிக்கும் தன்மையினைப் போற்றுகின்றது. உடல் வழியே உற்று நின்று தன்னிலை அறியா வகையில் தடுமாறுகின்றது. இவ்வாறு மூன்றினையும் பற்றி ஈர்க்கும் பண இசை தொன்றுதொட்டு மக்கள் இனம் மலர்ந்த நாள் தொட்டு உலகில் உலா வருகின்றது. உயிர்களை வாழ்வித்து வளமாக்குகிறது.

மரங்கள் கூட தன் கிளைகளின் அசைவிலே இசை பாடுகிறது. பறவைகளின் இசை உலக நாடுகளில் எல்லாம் பாராட்டப்படுகின்றது. இசை சமூகத்தை ஒன்றுபடுத்தி வாழவைப்பதாகும். வெறும் செவியளவு இன்பம் தருவது மட்டுமின்றி, உயிர் வாழ்வின் இன்றியமையாப் பண் நலனைத் தருவது இசையும் பாடலும் ஆகும்.

வேற்றுமொழிப் பாடல்களும் கூட எப்போதும் விதவிதமான வர்ணனைகளில் இறைவனின் புகழையும், பெருமைகளையும் போற்றும் வண்ணமாகவே புனையப் பெற்று வந்துள்ளன. சைவ சமயம் தொடர்பான பாடல்கள் ஓரளவு இருந்தாலும் பெரும்பாலான பாடல்கள் வைணவ சமயத்தையும், திருமாலின் பல அவதாரங்களைக் குறிக்கும் வண்ணமாகவுமே இருந்தன. ஆனால் இப்பாடல்கள், புனையப் பெற்ற காலத்துக்கு முன்பே இறைவனைப் போற்றிப் புனையப் பெற்ற திருவாசகம்,

தேவாரம் போன்ற தமிழ்ப்பாடல்கள் இந்தவிதமான மேடைகளில் இடம் பெற இயலாமல், ஒதுக்கப்பட்டுத் தள்ளிவைக்கப்பட்டவையாகவே இருந்து வந்துள்ளன.

மேலும், வேறு சில சமயங்களில், பாடுபவரும், பண் இயற்றுபவரும் தன் பாட்டுடைத் தலைவனாக, அவன் போற்றும் அல்லது போற்றி வணங்கும் இறைவன் புகைழப் பெருமைப்படுத்திப் பாடி வந்துள்ளனர். புகழைப் பறைசாற்றும் பாடல்களாகவே இருந்து வந்துள்ளன. இவ்வாறு மன்னர்களைப் புகழ்ந்து பாடி, அவனை மகிழ்விப்பதன் மூலம் பாடுவோர் சில விலைமதிப்பு வாய்ந்த பரிசில்கள் பெற்று மகிழ்ந்து வந்துள்ளதை நாம் அறியமுடிகிறது. இதனை,

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்**

சிறிய யாழைக் கொண்டும், பெரிய யாழைக் கொண்டும் வாழ்ந்த பாட்டு பொருநர் ஆற்றுப்படை. கூத்தர்கள் எல்லாக் கூத்துக்களையும் செய்ய வல்லவர்கள். அக்கூத்தரைப் பற்றிய பாடல் (மலைபடு கடாம்) கூத்தர் ஆற்றுப்படையாக அமைந்துள்ளது. இந்நான்கு ஆற்றுப்படைகளும் வழிப்படுத்துவோன், செலுத்தப்பட்டவனின் பெயரைக் கொண்டு அமைந்தன. திருமுருகாற்றுப்படை மட்டும் ஆற்றுப்படுத்துகின்ற தலைவன் பெயரைக் கொண்டு அமைந்துள்ளது.

## முடிவுரை

கவிஞன் இலக்கியத்தை அளிக்கும் முறையிலுள்ள பல கூறுகள் உத்தியாகக் கருதத்தக்கன. வருணனை, கற்பனை, எதிர்மை போன்ற பலவற்றை இங்கு நினைக்கலாம். சில நோக்கம் கருதியும், பயன் எதிர்பார்த்தும், நயம் விரும்பியும், நிறைவு விழைந்தும் இவை கையாளப்படும் போது உத்தியாகக் கொண்டு ஆராய்வதற்குத் தகுதி பெறுகின்றன.

# பாவேந்தரின் மூன்று ஒப்பில்லா உவமைகள்

கவிஞர் கா. வேழவேந்தன்

பெண் கல்வியின் பெரிய தேவையைப் பற்றி நம்மில் பேசாதோர் யாரேனும் உண்டா?

ஓர் ஆண் பெறும் கல்வியால் அவன் மட்டுமே பயன் அடைகிறான்; ஆனால் ஒரு பெண் பெறும் கல்வி விளக்கால் அந்தக் குடும்பத்தில் உள்ள எல்லோரும் அறிவொளியைப் பெறுகிறார்கள் என்பதே பாவேந்தரின் ஆணித்தரமான வாதம்.

தன் 'குடும்ப விளக்குப்' பாவியத்தில் அக்கவிஞர் பெருமகன், நம் நெஞ்சை அள்ளும் வகையில் இக்கருத்தை அழுத்தமாக வெளிப்படுத்திட அற்புதமான உவமையால் நல்விளக்கம் தருகின்றார்.

படிப்பறிவில்லாத மகளிர் கரம்பு நிலத்தைப் போலப் பயனற்றவர்கள். கரடுமுரடான களர் நிலத்தில், பயனில்லாத புல் பூண்டுகள் வளருமே தவிர, நல்ல பயிர் வகைகள் விளைந்து வளம் சேர்ப்பதில்லை. அதைப்போல் ஏட்டறிவில்லாத கைநாட்டுப் பெண்களின் வயிற்றில் அறிவார்ந்த மக்கள் பிறப்பதற்கே வாய்ப்பில்லை என்று அடித்துப் பேசுகின்றார் பாவேந்தர்.

திருத்தப்பட்ட கழனியிலே இருந்துதான், பொருத்தமான பயிர் வகைகள் செழித்துக் கொழிப்பதைப் போல், படித்த பெண்டிர் வயிற்றிலேதான், விடியல் கொணரும் அறிவுடைய மக்கள் பிறப்பார்கள் என்பது அவருடைய அசைக்க முடியாத கருத்து.

எப்படிப்பட்ட கவிதை விதையை, எத்தகைய உவமை உரத்துடன் கலந்து, எந்த நுட்பமுடன் ஏட்டு வயலில் ஊன்றினால், அருமையான கருத்து அறுவடை கிடைக்கும் என்பதற்குச் சான்றாவணமாக அமைந்த பாவேந்தரின் இந்தப் பாட்டடிகளே கால காலத்திற்கும் நெஞ்சில் கல்வெட்டாய்ப் பதிந்து விடுகின்றன.

இதுதான் அந்தப் பாடல்:

**கல்வியில் லாத பெண்கள்**
**களர்நிலம் ! அந்நி லத்தில்**
**புல்விளைந் திடலாம்; நல்ல**
**புதல்வர்கள் விளைவ தில்லை !**
**கல்வியை உடைய பெண்கள்**
**திருந்திய கழனி; அங்கே**
**நல்லறி வுடைய மக்கள்**
**விளைவதை நவில வோநான் !**

இந்தப் பாட்டடிகளைப் படித்த பின்னரும், வீட்டு இருட்சிறையில் நம் பெண் மழலைகள் யாரேனும் இருப்பின், அவர்களை மீட்டு, கல்விச் சாலைக்குக் கட்டாயம் அனுப்புவதே நம் சூளுரையாக இருக்க வேண்டாமா?

'இம்'மென்றால் சிறைவாசம், ஏன்? என்றால் வனவாசம் ! என்பது கொடுங்கோலர்களின் குரூர ஆட்சியில் நாம் அன்றாடம் பார்த்த சாட்சிகள்.

தப்பித்தவறி, முறைகேடான கொடியோர் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றிவிட்டால், கொலைகளும் கொடுமைகளும் நித்தம் நித்தம் நிகழும் என்பவற்றையெல்லாம் நெடிய வரலாற்றின் நீண்ட பக்கங்கள் பதிவு செய்துள்ளன.

இலட்சக்கணக்கான யூதமக்களை மிகக் கொடூரமான முறையில் கொன்று குவித்த இரத்தவெறியன் செர்மானிய கிட்லரும் ஒரு மனிதப் பிறவிதான் என்றாலும், அவனுக்கு அந்தப் பதவி எனும் கோடரியைத் தந்த மக்களையும் நோகாமல் இருக்க முடியவில்லை!

அதனால்தான் கால ஓட்டத்தில் செங்கோன்மைக்குள் கொடுங்கோன்மை ஊடுருவி ஆதிக்கம் செலுத்திடாமல் மக்கள் மிகுந்த கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்கிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

அப்படி, எளியோர் பலர் உள்ள நாட்டில், கொடியோர் சிலர் பதவி நாற்காலியைப் பிடித்து விட்டால் நாடே சுடுகாடாகி விடும் என்பதே அவருடைய திட்டவட்டமான கருத்து.

அதனால்தான் கடிக்கத் தெரியாத அப்பாவித் தவளைகளே வாழும் ஊரில், தவறியும் கூட நச்சுப் பாம்புக்குத் தலைமைப்பீடம் தந்து விடக்கூடாது என்பதே அவருடைய கவிதைக் கட்சி.

சரித்திரம் விரித்துக் காட்டும் அந்தப் பாடங்களை, பாவேந்தரின் வண்ணவரிகள் எத்தனை ஆழத்தோடு வெளிப்படுத்துகின்றன என்பதைக் காணும் போது வியப்பின் முகட்டிற்கே செல்கின்றோம்.

***சீறிவரும் பாம்புக்குத் தவளை யூரில்***
***திருமுடியோ சூட்டுவது?***

என்று கேட்கும் அவருடைய பாட்டடிகளின் வினாவில்தான் எவ்வளவு ஆழ்ந்த பொருள் புதைந்து கிடக்கிறது?

இனிமேல் எங்கேனும் பாம்பையும் தவளைகளையும் நாம் பார்க்கும் போதெல்லாம் இந்த அழகிய உவமையும், இந்தப் பாடல் தரும் பாடமும் நம் நினைவுக்கு வராமாற் போகுமா?

தமக்கே எல்லாம் தெரியும் என்பவர்களாலேயே உலகத்தில் முட்டாள்களின் தொகை மேலும் மேலும் பெருகிக் கொண்டே இருக்கிறது ! என்கிறார் ஒரு மேனாட்டறிஞர்.

அதுமட்டுமல்ல ; தாமே உயர்ந்தவர்; மேற்குடியினர், மற்றவரெல்லாம் தாழ்ந்தவர்; கீழ்ச்சாதியினர் என்ற செருக்கும் திமிர்வாதமும் சிலரிடம் மண்டிக் கிடப்பதால்தான், நாட்டில் சண்டைகளும், சச்சரவுகளும், கொலைகளும், இரத்தக் களரிகளும் நித்தம் நிகழுகின்றன.

இவ்வளவுக்குக் காரணம் என்ன?

பிறப்பால் சிலர் உயர்ந்தோர், மற்றவரெல்லாம் தாழ்ந்தோர் எனும் மடத்தனமான பேத உணர்வை வேத உணர்வாகச் சிலர் வளர்ப்பதே இத்தகைய கொடும் இழிநிலைக்குக் காரணம் என்கிறார் பாவேந்தர்.

மிக மிகப் பெரிய இந்தப் பூமிப் பந்தின் மேல், ஒரு சிறிய அணுவைப் போல் காட்சி தரும் நாம், இந்த உண்மை நிலையை ஒரு கணம் எண்ணிப் பார்த்தால், இப்படி எழும் ஆணவப் போக்கே காணாமல் போய்விடும் என்கிறார் அவர்.

இதற்காக, ஒரு கொய்யாப் பிஞ்சையும், அதன்மேல் ஊர்ந்து செல்லும் சிற்றெறும்பையும் காட்டி, அவர் கூறும் உவமை நயந்தான் எத்தனை பொருளாழத்துடன் அமைந்து சிலிர்ப்பூட்டுகின்றது?

அப்படிப் பாடமாகும் பாடல் இதுதான்;

**எத்தனை பெரிய வானம்;**
**எண்ணிப்பார் உனையும் நீயே !**
**இத்தரை கொய்யாப் பிஞ்சு ;**
**நீ அதில் சிற்றெ றும்பே !**
**அத்தனை பேரும் மெய்யாய்**
**அப்படித் தானே, மானே !**
**பித்தேறி மேல்கீழ் என்றே**
**மக்கள்தான் பேசல் என்னே !**

சாதிச்சழக்கிலும், பேத மௌடீகத்திலும் மூழ்கிக் கிடப்போருக்குத் தரப்பட்ட சவுக்கடிப் பாடல் அல்லவா இது?

இந்த அற்புதப் பாடலை உணர்ந்த பிறகேனும் மேல் கீழ் என்போரின் பித்தம் தெளியுமா?

## வாசகர் வாசகம் (1)

### கவித்தேனும் ஓடிற்றும்

வள்ளுவர்தம் குறள்நெறிக்கு உரைதான் வார்க்கும்
வழிமுறைகள் தெளிவாக்கி குறளின் சால்பு
பள்ளத்தில் வீழாமல் மாண்புற் றோங்க
பண்பாட்டுச் சிறப்பெல்லாம் தெரியக்காட்டி
துள்ளலிடும் கிளைக்கதைகள் காப்பியத்தில்
தொட்டேநம் வேளாண்மை பெருமை சாற்றி
கள்ளனுக்கே வடலூரார் தோள் கொடுத்தக்
கவித்தேனும் செந்தமிழ் ஓடிற்றய்யா !

**பாவலர் அறிவரசன், திருலோக்கி**

# நகரங்களின் அமைப்பில் துறைமுகப்பட்டினங்களும், வாணிங்களும்

ச. ஸ்ரீதர்
அண்ணாமலை நகர்

## முன்னுரை

திரைகட லோடியுந் திரவியம் தேடு என்று மூதுரைக்கேற்ப பண்டைய தமிழர்கள் கடல் கடந்து வெளிநாடுகளுடன் கடல் வாணியத்தில் ஈடுபட்டனர் என்ற குறிப்பினைச் சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது. கடல் வழியாகக் கப்பல்களில் ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கு அந்தந்த நாடுகளில் துறைமுகங்கள் இருந்தன. இவற்றுள் முடியுடை மூவேந்தர்களில் முதற்கண் குறிக்கத்தக்கவர்கள் சேர மன்னர்கள். இவர்களின் துறைமுகங்களையும் கடல் வாணிபங்களையும் கண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### வாணிபம்

வாணிபம் செய்வது வணிகருடைய தொழிலாகும். இதனைக்,

வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை (தொல், பொருள். மர. நூ.73)

என்பார் தொல்காப்பியர். ஒரு நாட்டின் தொழில்களிலே தலையாய தொழில் உழவுத் தொழிலேயாகும். திருவள்ளுவரும் தம் நூலில் உழவு என்றோர் அதிகாரத்தினை வகுத்துள்ளார்.

சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (குறள். 1031)

என்றார். உழவினையடுத்துப் போற்றப்படும் தொழில் வணிகமே. அதிலும் உள்நாட்டு வாணிகத்தைப் பார்க்கினும் வெளிநாட்டு வாணிகமே சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு உழவும் வாணிகமே சிறந்த தொழில்களாகும். உழவாலும் வாணிபத்தாலும் முன்னேற்றம் பெற்ற நாடே உலகில் நாகரிக நாடு என்று போற்றப்பெறும்.

## பண்டைய தமிழரின் அயல்நாட்டுத் தொடர்புகள்

பண்டைய தமிழர்கள் சோம்பித் திரியாமல் மலைகளுடனும், காடுகளுடனும், கடலுடனும் கலந்து உறவாடினார்கள். மேற்கே கிரீஸ், ரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையில் கடலோடிப் பிழைத்தார்கள். எகிப்து பாலஸ்தீனம், மெசப்பொடோமியா, பாபிலோனியா ஆகிய நாடுகளுடன் பண்டைய தமிழர்கள் வாணிகத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தனர். தமிழகத்துப் பண்டங்களான ஏலம், இலவங்கம், இஞ்சி, மிளகு ஆகியவற்றுக்கு மேற்காசிய நாடுகளில் பண்டைய நாள்களிலேயே வேட்கையுண்டு. யூதர்களின் ஆதி சமயத் தலைவரான மோசஸ் என்பார் தாம் நிகழ்த்தி வந்த இறை வழிபாட்டில் ஏலக்காயைப் பயன்படுத்தினார் எனப் பழைய ஏற்பாடு கூறுகின்றது. மோசஸ் கோயில் கட்டி வழிபாடு செய்தது கி.மு. 1490-ல் என்பர். கே.கே. பிள்ளை, ( தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், ப. 50)

சேரநாட்டுடன் வியாபாரத் தொடர்பு கொண்டவர்களில் முதல்வர் அரேபியரேயாவர். இங்கு உண்டாகும் மிளகு, ஏலம், இலவங்கம் என்னும் பொருட்களும் புல்தைலம் என்னும் நறுமண எண்ணெயும் அவர்கள் பெருமளவிற்கு வாங்கிச் சென்றனர். இத்தகைய எண்ணையையும் நறுமணப் பொருட்களையும் கொண்டு செல்வதற்காக எகிப்தின் ராணியொருத்தி ஐந்து கப்பல்களைச் சேர நாட்டிற்கு அனுப்பி வைத்தாளாம். இஸ்ரேல் நாட்டு மன்னரான சாலமனைத் தரிசிக்கச் சென்ற ஷிபாராணி அத்தகைய நறுமணப் ொருட்களை அவர்முன் காணிக்கையாக வைத்ததாக விவிலிய நூலில் கூறப்பட்டுள்ளது என்கிறார், கே.கே. பிள்ளை (மேலது ப. 50)

## துறைமுகங்கள்

சேர மன்னர்களின் கடல் வாணிபத்திற்குக் காரணம் அவர்களது நாட்டில் இயற்கையாக அமைந்திருந்த துறைமுகங்களேயாகும். முசிறி, தொண்டி, மாந்தை, பந்தர், நவுரா போன்ற சங்க காலத்துச் சேர துறைமுக நகரங்கள் அப்பெயரிலேயே இன்றும் நிலைத்திருக்கவில்லை. நறவு, மாந்தை, பந்தர் போன்றவை அழிந்தன. முசிறி, தொண்டி போன்றவை பெயர் மாற்றம் அடைந்தன. பொன்னானி, கொடுங்கோளூர் என்ற பெயர்கள் பண்டைய முசிறியையும், தொண்டியையும் தான் குறிக்கின்றன என்று கருதப்படுகிறது.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# வாசகர் வாசகம் (2)

பேரன்புசால் செந்தமிழ் ஆசிரியர் அய்யா,

அவர்களுக்கு வணக்கம். தமிழர்கள் அடிமைப்பட்டுக் கிடந்த நாளில் ஆரியர்கள் சமஸ்கிருதத்தை தேவமொழி, வேதமொழி என்றெல்லாம் கூறி ஏய்த்தனர் என்ற. உண்மை வழி, மூன்று நிலைகளை முன்வைத்து திருக்குறளின் கோட்பாடு ஆரியரின் மனுநீதி, நாரத நீதி, சுக்ரநீதி, வியாசநீதி போன்றவற்றை புறந்தள்ளும் கருத்துக்களையும் அறிவுரை, அறவுரைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளதை மிகச்சிறப்புற திரு. அரங்கசாமி அய்யா அவர்கள் எடுத்துக் கூறியிருந்தார். அவற்றிற்கு எடுத்துக்காட்டாகப் பல குறள்பாக்களை முன்னிறுத்தி தெளிவுபடுத்தி -யிருந்தமை மிக அற்புதம்.

தமிழர்கள் என்றும் தம்மொழி, இனம், தான், தனது என்ற உணர்வற்றவர்கள் என்பதோடு தமிழ்ப்பகைவர்களின் ஏவலராக அறியாமையைக் காதலிக்கும் தாழ்ந்த குணம் படைத்தோர் என்பதையும் நன்கு விவரித்திருந்தார்.

சோழராட்சி, பல்லவர் விஜய நகர ஆட்சிகளும் சாதிகளை உள்ளடக்கி மொழியையும் அழித்து விட்டதை மெய்மைப்படுத்தியிருந்தார். இறுதியாகத் தமிழர்கள் ஒன்று படல் வேண்டும். திருவள்ளுவரை முழுமையாகப் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும். இன்றேல் அழிவு உறுதி எனத் தமிழர்க்கு எச்சரிக்கை விடுத்துள்ளதை நாம் சிந்தித்துச் செயல்படுத்துவோம்.

அன்புடன்,

**புலவர் ந. ஞானசேகரன்,** திருலோக்கி

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்

உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னும் இவ்வூர்

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 February 2013 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- ✦ இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.